**<u>O.S.No.56/2019</u>**

<u>வா.சா.1, திருமதி.சண்முகவள்ளி</u>
நாள் : 02.08.2025 நேரம் : 12.10.PM

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது தாயார் இறப்பிற்கு பின் வழக்கு சொத்துக்களில் யார் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் நானும், எனது தம்பி 1ம் பிரதிவாதியும் அனுபவத்தில் உள்ளோம். தாவா சொத்தை நான் அடிக்கடி வந்து பார்த்து செல்வேன் என எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான், வருடத்திற்கு எத்தனை முறை பார்க்க செல்வேன் என்றால் 1வருடத்திற்கு சுமார் 3,4 தடவை தாவா சொத்தை பார்க்க செல்வேன். தாவா சொத்தில் எத்தனை ஓட்டு வீடுகள் உள்ளது என்றால் 2 ஓட்டு வீடுகள் இருந்தது. எனது பிராதிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ மேற்கூறியவாறு 2 ஓட்டு வீடுகள் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தாயார் உயிரோடு இருந்த போது தாவா சொத்துக்களை பொறுத்து எனது தாயார் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். எனது தாயார் இறப்பிற்கு பின் 11.8.2023 எனது தம்பியான 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் இருந்த 2 வீட்டிற்கும் எனது தம்பியான 1ம் பிரதிவாதி அவரது பெயரில் வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு ரசீது, தண்ணீர் வரி ரசீது ஏற்பட்டு வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் இறப்பிற்கு பின் எனது தாயார் பெயரிலோ, எனது பெயரிலோ வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு ரசீது, தண்ணீர் வரி ரசீது ஏற்படவில்லை என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்னர் தாவா சொத்துக்களை பொறுத்து அவர்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்னர் தாவா சொத்துக்களுக்கு வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு ரசீது, தண்ணீர் வரி ரசீது அவர்கள் பெயரில் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இன்றைய தேதி வரை தாவா

சொத்துக்களை பொறுத்து வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு ரசீது, தண்ணீர் வரி ரசீது ஏற்பட்டது இல்லை என்றால் சரிதான். 5.9.2019ம் தேதியில் தாவா சொத்தில் உள்ள வீடுகளை 2, 3 பிரதிவாதிகள் இடித்துவிட்டனர். மேற்படி தாவா சொத்தில் உள்ள வீடுகளை இடிப்பதற்கு முன் 2, 3 பிரதிவாதிகள் சுமார் 5 வருடங்கள் அந்த வீடுகளில் குடியிருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு பின்னர் மேற்படி 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்தில் இருந்த வீடுகளை  வேறு நபர்களுக்கு வாடகைக்கு விட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது, தாவா சொத்து எனது தம்பியிடம் தான் இருந்தது என நினைத்து கொண்டிருந்தேன். தாவா சொத்தில் இருந்த வீடுகளில் எனது தம்பியான 1ம் பிரதிவாதி குடியிருந்தாரா என்றால் இல்லை. தாவா சொத்தில் இருந்த வீடுகளை எனது தம்பியான 1ம் பிரதிவாதி வாடகைக்கு விட்டு அனுபவம் செய்து வந்தாரா என்றால் தாவா சொத்தில் இருந்த வீடுகள் சிதலமடைந்து இருந்ததாலும், வீடுகள் பூட்டியிருந்ததாலும் வாடகைக்கு விட்டதாக தெரியவில்லை. தாவா சொத்தில் இருந்த வீடுகள் எனது தாய், தந்தையர் இறந்த பின்னர் சேதமடைந்துவிட்டன. எனது தாய், தந்தையர் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்தில் இருந்த வீடுகள் வாடகைக்கு விடப்பட்டு இருந்தன. தாவா சொத்துக்களை நான் பார்க்காததால் தான் அதில் யார்யார் அனுபவத்தில் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பாகம் பிரித்து கொள்ளலாம் என்று எனது தம்பியான 1ம் பிரதிவாதியிடம் நான் கேட்டேனா என்றால் எனது தாய், தந்தையர் இறப்பிற்கு பின்னர் 2, 3 தினங்கள் கழித்து எனது தம்பியான 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்துக்களை பாகம் பிரித்து கொள்ளலாம் என்று கேட்டேன், எனது தம்பி பிரித்து தருவதாக கூறினார். கடைசியாக எப்போது பாகம் கேட்டேன் என்றால் 2019ம் ஆண்டு தாவா சொத்துக்களில் இருந்த வீடுகளை இடித்த பிறகு எனது தம்பியிடம் கேட்டதற்கு அப்போது பாகம் தருவதாக தான் கூறினார். மேற்படி 2019ம் ஆண்டு பாகம் கோரிய விவரத்தை எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் பாகப்பிரிவினை கேட்கும்போது எனது உறவினர்களை

அழைத்து சென்று தான் பாகம் கேட்டேன். அப்போது கொடுக்காமல் 1ம் பிரதிவாதி காலதாமதம் செய்ததால் தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்துக்களில் பாகம் கேட்க சென்ற போது யாரை அழைத்து சென்றேன் என்றால் ஜோதி நித்தியானந்தம் மகன் பாண்டித்துரை மற்றும் தேவிப்பட்டிணத்தில் உள்ள 2 நண்பர்களை அழைத்து சென்றேன். மேற்படி 2 நண்பர்களின் பெயர்கள் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நானும், மேற்படி நபர்களும் தேவிப்பட்டிணத்தில் உள்ள எனது வீட்டில் வைத்து தான் பாகம் கேட்டோம், 1ம் பிரதிவாதியும், நானும் ஒரே வீட்டில் தான் இருந்தோம். சாட்சி தற்போது தேவிப்பட்டிணத்தில் உள்ள வீட்டில் வைத்து பாகம் கேட்கவில்லை என்றும், தேவிப்பட்டிணத்தில் ஒரு பொது இடத்தில் வைத்து தான் 1ம் பிரதிவாதியிடம் பாகம் கேட்டதாக கூறுகிறார். மேற்படி பாகம் பிரித்து கேட்ட போது எனது தம்பியான 1ம் பிரதிவாதி இராமநாதபுரத்தில் தான் இருந்தார், அவரை தேவிப்பட்டிணத்திற்கு வரவைத்து தாவா சொத்துக்களில் பாகம் கேட்டோம். அப்போது 1ம் பிரதிவாதி பாகம் கொடுக்காமல் காலதாமதப்படுத்தினார். மேற்படி பாகம் கேட்டு 4, 5 தினங்களுக்குள் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன். நான் எனது பிராதில் 1ம் பிரதிவாதியின் முகவரி இராமநாதபுரம் என்று குறிப்பிட்டுள்ளேனா அல்லது தேவிப்பட்டிணம் முகவரி குறிப்பிட்டுள்ளேனா என்றால் தேவிப்பட்டிணம் முகவரியை தான் குறிப்பிட்டுள்ளேன். நான் வழக்கு தாக்கல் செய்யும் போது எனது தம்பி சில தினங்களுக்கு தேவிப்பட்டிணத்தில் இருந்தார், அதன் பிறகு எங்கு இருந்தார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் இராமநாதபுரம் முகவரி எனக்கு தெரியாது. நான் தேவிப்பட்டிணத்தில் வைத்து பாகம் கேட்ட போது எனது தம்பியான 1ம் பிரதிவாதிக்கு தேவிப்பட்டிணத்தில் சொந்த வீடோ, வாடகை வீடோ இல்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது தேவிப்பட்டிணத்தில் எனது தம்பியான 1ம் பிரதிவாதி குடியிருக்காத போதும், 1ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை கிடைக்க கூடாது என்ற நோக்கத்திலும் நான் தவறான முகவரியை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. நானும், எனது தம்பியான 1ம் பிரதிவாதியும் இன்றைய தினம் வரை நல்ல உறவு முறையிலும், தொடர்பிலும் உள்ளோம் என்றாலும் இந்த 2, 3 பிரதிவாதிகளின் சொத்தை ஏமாற்றுவதற்காக எனது தம்பி எங்கு உள்ளார் என்று தெரியாதது போல் பேப்பர் விளம்பரம் கொடுத்து இந்த வழக்கை நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களை கிரையம் கொடுத்துவிட்டு எனது தூண்டுதலின் பேரில் நானும், 1ம் பிரதிவாதியும் ஒன்று சேர்ந்து 2, 3 பிரதிவாதிகளின் கிரைய சொத்தை மோசடி செய்வதற்காக இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு கை, கால் விளங்காத நிலையில் இருந்தார் என எனது பிராதில் குறிப்பிட்டுள்ளதற்கு ஆதராங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இராமநாதபுரம் அரவிந்த் மருத்துவமனையில் எனது தாயார் சிகிச்சையில் இருந்தார், அதற்கான ஆதாரங்கள் என் கைவசம் இல்லை. எனது தாயார் கிரையம் வாங்கிய அசல் பத்திரங்கள் இரண்டையும் 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளின் வசம் கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் எனது தாயாரின் கிரைய சொத்துக்கள் என்பதால் அதை அவர் யாருக்கு வேண்டுமானாலும் எழுதி வைக்கலாம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உண்மையில் எனது தாயார் தாவா சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துள்ளதாக தான் தன் கைவசம் வைத்துள்ள அசல் கிரைய ஆவணங்களை எனது தம்பியிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது தம்பி இந்த நீதிமன்றத்தில் ஆஜரானால் உயில் சம்மந்தமான சங்கதிகள் தெரிந்துவிடும் என்பதால் நான் எனது தம்பியை நீதிமன்றத்தில் ஆஜராகவிடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கான முழு கிரைய தொகையை 2, 3 பிரதிவாதிகளிடம் வாங்கிவிட்டு 1ம் பிரதிவாதியின் சகோதரியான எனக்கு பணம் அல்லது சொத்து கிடைக்க வேண்டும் என்பதற்காக 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கில் ஆஜராகாமல் உள்ளார் என்றால் சரியல்ல, எனது தம்பியான 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் உயில் ஆவணம் மோசடியானது, எனக்கு

தெரியாமல் எழுதி கொடுக்கப்பட்ட ஆவணம். எனது தாயார் அவரது கிரைய சொத்தை 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்க எனது கையெழுத்தோ, அனுமதியோ தேவையில்லை என்றால் சரியல்ல, நானும் எனது தாயாரை பராமரித்துள்ளேன், அதனால் எனக்கும் பாதி சொத்துக்களில் பங்கு உள்ளது. நான் எனது தாய், தந்தையரை எந்த காலத்திலும் பராமரித்தது இல்லை என்றாலோ, 1ம் பிரதிவாதிதான் எனது தாயாரை கடைசி வரை பார்த்து கொண்டார் என்றாலும் சரியல்ல. எனது தாயார் உண்மையிலேயே உயிலில் கையெழுத்திட்டார் என்றாலும், அதை மறைப்பதற்காக நான் பொய்யாக எனது தாயாருக்கு கை, கால் விளங்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும், எனது தாயாரும் ஒரே வீட்டில் இருந்தார்கள் என்றாலும், நானும், எனது கணவரும் வேறு வீட்டில் இருந்தோம் என்றாலும் சரியல்ல. நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாக ஒரு வீட்டில் தான் வசித்து வந்தோம். எனது தம்பி நீதிமன்றத்திற்கு ஆஜரானால் மேற்படி உயிலில் உள்ள சாட்சிகள் யாரென்று கூறிவிடுவார் என்பதால் அவரை நீதிமன்றத்திற்கு வரவிடாமல் நான் தடுத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல, எனது தம்பி எங்குள்ளார் என்று எனக்கு தெரியாது. எனது தாயார் எழுதிய உயிலை தயார் செய்த நோட்டரி அட்வகேட் திரு.S.கணேசன் இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாயாரின் கையெழுத்து தெரியுமா என்றால் தெரியும். 1982, 1983ம் தேதியிட்ட பத்திரங்களில் எனது அம்மாவின் கையெழுத்து உள்ளது. உயிலில் உள்ள கையெழுத்தையும், மேற்படி 1982, 1983ம் தேதியிட்ட எனது கைவசம் உள்ள பத்திரங்களையும் கையெழுத்து நிபுணர்க்கு அனுப்பி ஒப்பீடு செய்ய தயாராக இருக்கிறேன். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் தாவா சொத்துக்களில் எனது தம்பியும், நானும் கூட்டு அனுபவத்தில் உள்ளோம் என்பதை நிரூபணம் செய்வதற்கு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எனது தாயார் இறந்த 2000ம் வருடம் முதல் இன்றைய தேதி வரையில் நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றாலும், எனவே எனது பிராது காலவரையறை சட்டத்தால்

பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் கூட்டு அனுபவத்தில் இருப்பது போல் நீதிமன்ற கட்டணம் செலுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் சரியான பிரதி பிரயோஜனத்திற்கு சரியான நபரிடமிருந்து தாவா சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கு எந்தவிதமான பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.10 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.08.02 10:08:09 +0530